14.10.2024, OS.No.284/2021, D.W. 1- அமீது பாத்திமா

சாட்சி அழைக்கப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எதிர் வழக்குரையில் தாவா சொத்தை பொறுத்து என்ன கூறியுள்ளோம் என்றால் என் தகப்பனார் சொத்தில் எனக்குரிய பங்கை கேட்டுள்ளேன். வாதி செய்யும் கட்சியை நான் ஒப்பு கொள்கிறேன் என்றால் சரிதான். 23.12.2005 ம்தேதியிட்ட என் அப்பா எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் நீதிமன்ற அறிவிப்பு கிடைத்த பின்னர் தெரியும். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் நகல் எதையும் நான் எடுத்து பார்க்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வாதியிடம் சொத்து சம்பந்தமாக நான் எதுவும் பேசவில்லை. 2005 ம் ஆண்டு எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் எனக்கு தெரிய வந்தது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை என் அப்பா நல்ல சுயநினைவோடு, பதிவாளர் அலுவகலத்திற்கு வந்து என் சகோதரர்கள் பெயருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து சுவாதீனத்தையும் என் அப்பா ஒப்படைத்து பிரதிவாதிகள் சொத்தின் அனுபவத்தை எடுத்து கொண்டு நாளது தேதி வரை தீர்வை செலுத்தி அபிவிருத்தி செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மாநகராட்சியில் தாவா சொத்திற்கு தற்போது யார் பெயரில் வரிவிதிப்பு உள்ளது என்று பார்த்து அது சம்பந்தபட்ட ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதை காட்டுவதற்கு இந்த வழக்கில் நான் மருத்துவ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னென்ன சொத்துக்களை எந்த சகோதரர்களுக்கு கொடுத்தார்கள் என்ற விபரம் தெரியாது. நான் மல்கிபீவியின் கணவரிடம் செட்டில்மெண்ட் பத்திரத்தில் ஏன் சாட்சி கையெழுத்து போட்டீர்கள் என்று கேட்டேன் என்றால் சரியல்ல. நான் என் அப்பாவிடம் தனியாக எழுதி வாங்கிய செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி வாதி மற்றும் 7 ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு என் அப்பா ஏற்கனவே செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் சொத்து

கொடுத்துள்ளதால் இந்த வழக்கில் தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த பங்கும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு எந்த மருத்துவர் சிகிச்சை அளித்தார் என்றால் வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பிராது 2 ம் தபசில் சொத்து யார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 08.10.1971 ம்தேதி பிராது 2 ம் தபசில் சொத்து சேக்முகமது, நாகூர்மீரா இளவர்களாக இருக்கும்போது என் தாயாரை கார்டியனாக காட்டி சொத்து வாங்கப்பட்டது என்றால் நான் இளவராக இருந்ததால் எனக்கு தெரியாது. நான் 08.10.1971 ம்தேதியிட்ட ஆவணத்தின் நகலை பதிவாளர் அலுவலகத்தில் எடுத்து பார்க்கவில்லை. வில்லங்கசான்று எதுவும் எடுத்து பார்க்கவில்லை. அந்த பத்திரத்தின்படி என் தாயார் தான் கிரைய தொகை முழுவதையும் செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராது 2 ம் தபசில் சொத்து என் அப்பாவின் சொத்து அல்ல என்றும், அது சேக் முகமது மற்றும் நாகூர் மீரா சொத்து என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி சேக்முகமது மற்றும் நாகூர் மீரா மேஜனரான பின்னர் 2 ம் தபசில்சொத்தை தாயார் பெயருக்கு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. என் தாயார் 2 ம் தபசில் சொத்தை பொறுத்து 2 முதல் 6 பிரதிவாதிகள் பெயருக்கு 21.01.2008 ம்தேதி நன்கொடை ஆவணம் எழுதி கொடுத்து 2 முதல் 6 பிரதிவாதிகள் அனுபவத்தில் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரங்கள் செல்லாது என்று நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். பிராது 2 ம் தபசில் சொத்து என் அப்பாவிற்கு பாத்தியபட்ட சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இஸ்லாமிய சட்டப்படி என் தகப்பனார் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமும், 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு என் தாயார் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி மெக்காவிற்கு செல்லும்போது எங்கள் வீட்டிற்கு வந்து புறப்பட்டு சென்றார் என்றால் சரிதான். எனக்கும், என் சகோதரர்களுக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரிதான். 1 ம் தபசில் சொத்தில் எனக்கு பங்கு உள்ளது என்று மற்ற பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். என் அப்பா உயிரோடு இருக்கும்போது சொத்தில் பாகம் கேட்டு எழுத்து மூலமாக ஏதாவது அனுப்பினேனா என்றால் இஸ்லாமிய சட்டப்படி அப்பா

உயிரோடு இருக்கும்போது சொத்தில் பாகம் கேட்க முடியாது. என் அப்பா எனக்கும், என் சகோதரிகளுக்கும் நகை, சீர்சிராட்டு செய்தது போன்று இன்றைய தேதி வரை என் சகோதரர்களும் எனக்கும், என் சகோதரிகளுக்கும் நகை, சீர்சிராட்டு செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஜனவரி 2008 மாதத்தில் என் அப்பா இறந்தார் என்றால் சரிதான். அவர் இறக்கும் காலத்தில் என்ன சொத்துக்களை விட்டு சென்றாரோ அதில் தான் நான் பங்கு கோர முடியும் என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்தை பொறுத்து ஏற்கனவே என் தகப்பனார் உயிரோடு இருக்கும்போது செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்த படியால் அவர் இறக்கும்போது 1வது இலக்க சொத்தை விட்டு செல்லவில்லை என்றும், எனவே அதில் நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தாவா சொத்து சம்பந்தமாக நான் வில்லங்க சான்று எடுத்து பார்க்கவில்லை. 23.12.2005 ம்தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்ட விபரம் அன்றைய தேதியிலேயே எனக்கு தெரியும் என்றும், தற்போது காலதாமதமாக சொத்தில் பாகம் கோருகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா கைநடுக்கத்துடன் இருந்ததால் தான் செட்டில்மெண்ட் ஆவணத்தில் ரேகை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் சுயநினைவோடு இல்லை. 2005 ம் ஆண்டு என் அப்பாவிற்கு என்ன வயது என்று எனக்கு தெரியவில்லை. 2005 ம் ஆண்டில் அவர் கதவு எண்.62 ல் உள்ள பூர்விக வீட்டில் குடியிருந்தார். அந்த சொத்தை தற்போது யார் அனுபவிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. என் அப்பாவை கவனித்து வந்ததாக கூறப்படும் உழவனை இது வரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி உழவனை சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் எனக்கு அந்த விபரம் தெரியவில்லை. தாவா சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.